# கோயிலை மையப்படுத்திய குடியேற்ற மரபு - மண்டூர் முருகன் கோயிலை மையப்படுத்திய ஆய்வு

சந்திரசேகரம் எஸ்

மட்டக்களப்பின் அரம்பகால குடியேற்ற மரபுகள் கோயிற் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை. இதன் ஆரம்ப நிலை வேடருடன் தொடர்புபட்டது. அடுத்து கோயிற் பண்பாட்டையும் சமூக அதிகாரக் கட்டமைப்பினையும் அடிப்படையாகக் கொண்ட தென்னிந்திய – சோழ விவசாய குடியேற்றங்களுடனும் அக்குடியேற்ற மையங்களில் இருந்து நிகழ்ந்த உபகுடியேற்ற, குடிப் பரம்பல்களுடனும் தொடர்புபட்டது. இந்தவகையில் மண்டூர் முருகன் கோயிலை அடிப்படையாகக் கொண்டு அங்கு நிகழ்ந்த குடியேற்ற - குடிப்பரம்பலையும் அதனூடான சமூக மரபுகளையும் காண முனைவதாக இவ்வாய்வு அமைகின்றது.இது பெரும்பாலும் வாய்மொழி மரபுகளினூடாகவே நிறுவப்படுகின்றது. இவ்வாய்வில், ஆரம்ப நிலையில் வேல் வந்தமை பற்றிய பல கதைகள் குறித்த குழுமங்கள் தம் அதிகாரத்தை நிலைநிறுத்தும் முயற்சியாக அமையுமாறும் மட்டக்களப்பிலுள்ள ஏனைய பல ஆலயங்களது ஆரம்ப வரலாறுகள் வேடர்கள் வேல்வைத்து வழிபட்டமை பற்றிய செய்திகள் மற்றும் சில அகச்சான்றுகள் மூலமும் ஆதிக்குடிகளாக வேடர்கள் இங்கு வாழ்ந்துள்ளமை நிறுவப்படுகின்றது.அடுத்து இவ்வாலயத்திற்கு முன்புறமாக அமைந்துள்ள பேராற்று வழியாக தென்புறமாக இருந்து வந்து சாதிக் குழுமம் ஒன்று வேடருடன் இணைந்துகொண்டமை பற்றிய தகவல்களும் அவர்கள் சீர்பாதக்காரராக இருக்கவேண்டும் என்பதும் நோக்கப்படுகிறது. சீர்பாதரின் வரவு கோயிலை மையப்படுத்திய 'தன்னிச்சையான குடிப்பரம்பலாக' அமைவது நோக்கப் படுகிறது.அடுத்த நிலையில் அரச தலையீடும் அதனூடான நிர்வாகப் பணிப்பகுப்பும் இடம்பெறுகின்றது. இந்த ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டபோது சோழக்குடியேற்ற கருத்தியலின் பின்பற்றுகை காரணமாக சோழ வேளாளமையக் குடியேற்றமான திருக்கோயில் பகுதியில் இருந்து கவுத்தன்குடி வேளாளர் கொண்டுவரப்பட்டு விவசாயக் குடியேற்றமொன்று மேற்கொள்ளப்படுவதும் அதிலிருந்து ஒரு பகுதியினர் பழுகாமத்திற்குப் பெயர்ச்சியுறுவதும் ஆராயப்படுகிறது.

இவற்றினூடாக மட்டக்களப்பில் பூர்வ குடிகளாக வேடர்கள் இருந்துள்ளனர் என்பதும் திருக்கோயில், வீரமுனை ஆகிய குடியேற்ற மையங்களில் இருந்து வடபுறம் நோக்கிய குடிப்பரம்பலொன்று நிகழ்ந்துள்ளது என்பதும் இக்குடிப்பரம்பலும் கோயிலையும் நிவுடைமையினையும் சமூக அதிகார ஒழுங்கமைவினையும் மையம் கொண்டிருந்த சோழ குடியேற்ற மரபின் அடிப்படையிலேயே இடம்பெற்றுள்ளது என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** முருகன் ஆலயம், குடியேற்ற மரபு, பூர்வீகக் குடிகள்

*மொழித்துறை, கலை கலாசார பீடம்*